1996 ஆகஸ்ட் 20] [திரு. சி. ஞானசேகரன்]

கொறடா அமர்ந்துகொண்டிருக்கிற இடத்தில் யாரோ--சிவப்பு சால்வை போர்த்திக்கொண்டு--ஒரு கம்யூனிஸ்டு கட்சியினுடைய உறுப்பினர் அமர்ந்துகொண்டிருக்கிறாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சியினுடைய உறுப்பினரையே உங்களுக்கு அடையாளம் தெரியவில்லை என்கிறபோது எனக்கு வருத்தமாக இருக்கிறது.

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு இன்று உடல்நலம் சற்றுக் குறைவாக இருக்கிறது. இந்தக் குளிர் தாங்கமுடியவில்லை. ஆகவேதான் சால்வையை வாங்கி கதகதப்பாகப் போர்த்திக் கொண்டிருக்கிறேன். வேறு ஒன்றுமில்லை.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் சொன்னதிலேயிருந்து பொதுவாக உடல்நலத்திற்கும் பாதுகாப்பிற்கும் சிகப்பே சிறந்தது என்பது தெளிவாகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. மு.க. ஸ்டாலின்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவப்பு சால்வை போடுகிறவர்கள் எல்லாம் கம்யூனிஸ்டு கட்சியினராகி விடமுடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடியிலே கறுப்பு ஏன் இருக்கிறது என்று கேட்டபோது காலத்தால் சிவப்பு கறுப்பை எடுத்துவிடும் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 'We are the real Black Communists' அப்படித்தான் சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிவப்பு என்பது டேஞ்சர். ஆகையால், இந்தத் துண்டைப் போட்டிருக்கிறதினாலே, இன்னும் கொஞ்சம் உடல் குன்றிப்போகும் சொக்கருக்கு. (சிரிப்பு).

திரு. ஆர். சொக்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, சிவப்பு அல்லது இந்த வர்ணங்களால் அந்தக் கதகதப் வருவதில்லை. கம்பளி சால்வை என்ற காரணத்தினால்தா அந்தக் கதகதப்பு வருகிறது. நிறத்திற்கும், கதகதப்பிற்கும் சம்பந்த இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்க அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்தப் பிரச்சினை இதனுடன் நிறுத்திவிடுவோமா?

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்க சிவப்புத் துண்டு போட்டிருப்பதால் உடல் குன்றிவிடும் என்றார்க அவர் உடலில் ஓடுவது சிவப்பு இரத்தம்தான். அதனால் உட குன்றிவிடாது.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, சால்வை பிரச்சினையை விட்டு விட்டு, சால்வ ஆ வேண்டிய பிரச்சினையைப் பற்றி பேசும்படி கேட்டுக்கொள்கிறே

திரு. ஜி. பழனிசாமி: எப்படியோ கைமாறின சிவப்புத் துண் என் தோளுக்கு வந்தால் சரி. (சிரிப்பு)

திரு. ஜி. நிஜாமுதீன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ அவர்களே, நேற்று நீங்கள் உங்கள் ஆசனத்தில் அமர்வதற் மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள அழைக்கும்போது, என் தோளிலே சால்வை இருக்கிறது. அதை கழற்றிவிட்டு என்னால் வந்து அமர முடியாது என்று கூறினா இன்று எப்படி அந்தச் சால்வையை தன் தோளிலிருந்து இறக்கினா என்பது தெரியவில்லை. அதற்கான விளக்கத்தை அவர் தருவார

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் இந்த ஆசனத்தி அமர்வதற்குத்தான் அந்தக் காரணத்தைச் சொன்னார். அது பக்கத்திலே அங்கேயே உள்ள இருக்கை. போதும், இத்துடன் விட்டுவிடுங்கள். திரு. டி.சி. விஜயன்.

. மானியக் கோரிக்கைகள், 1996-97, விவாதமும் வாக்கெடுப்பும்--தொடர்ச்சி.

கோரிக்கை எண் 28-தொழிற்சாலைகள் உள்ளடங்கலான தொழிலாளர் நலன்--தொடர்ச்சி

(ஆ) கோரிக்கை எண் 21-மீனளம்--தொடர்ச்சி

திரு. டி.சி. விஜயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ர்களே, நான் கன்னிப் பேச்சு பேசிக்கொண்டிருக்கிறேன். (சிரிப்பு) ன் பேசும்போது நடுவிலே என்னை திசைமாற்றி விட்டார்கள் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கன்னிப் பேச்சு சும்போது, யாரும் குறுக்கிடக் கூடாது என்பது மரபு. அதனால் னுடன் விட்டுவிடுங்கள்.

திரு. டி.சி. விஜயன்: மேலும் அந்தப் பகுதியில் 10,000 ம்பத்தினரின் நலனுக்காக ஒதுக்கப்பட்ட அந்தத் தொகையை னடியாக வழங்கி திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, எங்கள் பகுதியில் கடற்கரை ஓரம் வாய்க்கால் தியாக இருப்பதால், பருவமழை வரும்போதெல்லாம் கடல் அரிப்பு பட்டு பல மீனவக் குடும்பங்கள் வருடா வருடம் பெரும் திப்புக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றார்கள். இப்போதுகூட, அந்தக் ல் அரிப்பு மிக மோசமான நிலையில் இருக்கிறது. அண்ணன் ாதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் இன்று வந்து ர்வையிடுகிறார் என்பதால், அதைப் பார்வையிட்டு எங்களுக்கு ந்தத் தடுப்புச் சுவரைப் போட்டு, மீனவ சமுதாயத்தையும், களையும் காப்பாற்ற வேண்டுமென்ற என்னுடைய தாழ்மையான ண்டுகோளை விடுத்து, எனக்கு இந்த அளவுக்குப் பேச ய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு ன்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, டைபெறுகிறேன். வணக்கம்.